

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 12.03.2026


# சிலிண்டர் தட்டுப்பாடு!

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும், அதற்கு பதிலடியாக ஈரான் நடத்தும் தாக்குதலும், உலகம் முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

**வளைகுடா நாடுகளில் இருந்து உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்வது தடைபட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வயல்கள், இயற்கை எரிவாயு உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டுள்ளன. ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கி உள்ளது. போர் காரணமாக கத்தாரின் முன்னணி நிறுவனங்கள் எல்.பி.ஜி. உற்பத்தி ஆலைகளை மூடிவிட்டன. ஹார்முஸ் ஜலசந்தியில் போக்குவரத்து முடங்கியிருப்பதால் இந்திய பொதுத் துறை, தனியார் நிறுவனங்களால் எல்.பி.ஜி.யை இறக்குமதி செய்ய முடியவில்லை.**

அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் 10 நாட்களுக்கு மேலாக நீடிக்கும் நிலையில் இந்தியாவின் எல்.பி.ஜி. இருப்பு கணிசமாக குறைந்து வருகிறது. இதன் எதிர்விளைவாக நாடு முழுவதும் சமையல் மற்றும் வர்த்தக காஸ் சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் சுமார் 90 நாட்களுக்குத் தேவையான கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. இதனால் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை. ஆனால், சமையல் கேஸ் (எல்.பி.ஜி.) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சென்னை மணலியில் உள்ள ஐ.ஓ.சி. சிலிண்டர் நிரப்பும் நிறுவனத்தில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாடு எரிவாயு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகம் பாதியாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் தான், தமிழ்நாடு விடுதி உரிமையாளர் நலச்சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக விடுதிகளில் டீ, காபி, தோசை, சப்பாத்தி உள்ளிட்டவை வழங்கப்படாது எனத் தெரிவித்திருக்கிறது. அதேபோல, சாம்பார் மற்றும் குருமாவுக்குப் பதில் சட்னி வழங்கப்படும் எனவும் கலவை சாதங்கள், முட்டை போன்ற குறைவான எரிபொருளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய உணவுகள் மட்டுமே கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமையல் காஸ் தட்டுப்பாடு குறித்து பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பெட்ரோலியத் துறை மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் நாடு முழுவதும் தடையின்றி சமையல் காஸ் சிலிண்டர் விநியோகம் செய்வது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. மாற்று வழிகள் குறித்து அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பிரதமர் மோடி விரிவாக ஆலோசனை நடத்தி உள்ளார்.

**தமிழ்நாட்டில் அடுத்த 20 நாட்களுக்குத் தேவையான வீட்டுப்பயன்பாட்டு சமையல் காஸ் சிலிண்டர் கையிருப்பு உள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது. தடையின்றி காஸ் சிலிண்டர்களை வினியோகம் செய்யுமாறு கோரிக்கை விடுத்து ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கடிதம் எழுதி உள்ளது.**

**“வணிக எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள உணவகங்களுக்குத் தேவையான மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும். போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள சிறு குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்” என்று பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.**

கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், பதுக்கலை தடுக்க அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை ஒன்றிய அரசு கையில் எடுத்துள்ளது. அதன்படி, சமையல் கேஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்து கள்ளச்சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதன்படி எல்.பி.ஜி. சிலிண்டர்களை பதுக்கினால் எஸ்மா சட்டத்தின்படி 3 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில், **“உலகளாவிய எரிபொருள் விநியோகத்தைப் பாதிக்கும் தற்போதைய புவிசார் அரசியல் இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, எல்.பி.ஜி. உற்பத்தியை அதிகரிக்கவும், உள்நாட்டு நுகர்வோர் மற்றும் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசியமான உள்நாட்டு சாராத் துறைகளுக்கு அதன் இருப்பை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்ற உள்நாட்டு சாராத் துறைகளிடமிருந்து வரும் கோரிக்கைகள், எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் செயல் இயக்குநர்களைக் கொண்ட ஒரு குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் தகுதி, அவசியம் மற்றும் எரிபொருள் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்”** என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**அமெரிக்கா, இஸ்ரேல் தொடங்கிய தன்னிச்சையான போரே இதற்கு அடிப்படைக் காரணம் ஆகும். இதுதான் மேற்கு ஆசியாவைத் தாண்டிய உலகப் பாதிப்பாக மாறி வருகிறது. இதுபோன்ற பாதிப்புகளை முன்கூட்டியே ஒன்றிய பா.ஜ.க. அரசு கணித்ததாகத் தெரியவில்லை. முன்கூட்டியே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உலகம் இத்தகைய நெருக்கடியைச் சந்திக்கும் என போர் நடத்தும் நாடுகளுக்கு எச்சரிக்கை செய்யவும் இல்லை.**

**சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள முடக்கத்தை நீக்க துரிதமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட வேண்டும். போர் சூழலை உருவாக்கிய நாடுகளுக்கு அழுத்தம் தர வேண்டும். போரை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.**





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2026) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர்தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், 9.67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/ கோ.பிரகாஷ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் சந்திர சேகர் சாகமூரி, பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் மற்றும் தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே. சுதீஷ் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## அமெரிக்காவிடம் பிரதமர் மோடி சரணடைந்துவிட்டார் – எதிர்க்கட்சிகள் முழக்கம்!

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு: நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி தி.மு.க. நோட்டீஸ்!

## மக்களவையில் டி.ஆர்.பாலு – மாநிலங்களவையில் திருச்சி சிவா அளித்தனர்!

**புதுடெல்லி, மார்ச். 12-**

**நாட்டில் ஏற்பட்டுள்ள சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி தி.மு.க. சார்பில் இரு அவைகளிலும் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. மக்களவையில் டி.ஆர்.பாலுவும், மாநிலங்களவையில் திருச்சி சிவாவும் நோட்டீஸ் அளித்தனர்.**





தமிழ்நாட்டில் ஓட்டல்களிலும், வீடுகளிலும் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார் என்றும் நோட்டீஸில் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்க ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் டி.ஆர்.பாலு வலியுறுத்தினார்.

இந்நிலையில், சிலிண்டர் தட்டுப்பாடு குறித்து விவாதிக்க இரு அவைகளிலும் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு கண்டனம் தெரிவித்து மக்களவையில் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட், வி.சி.க. உள்ளிட்ட கட்சிகள் முழக்கமிட்டன. தமிழிலும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அப்போது, சமையல் எரிவாயு பிரச்சினைக்கு ஒன்றிய அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

**ராகுல் காந்தி குற்றச்சாட்டு!**

மக்களவையில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. விவாத்தில் பங்கேற்று பேசிய ராகுல் காந்தி, பிரதமர் மோடி அமெரிக்காவிடம் சரணடைந்து விட்டது குறித்து மக்களவையில் பேச பல முறை தாம் முயற்சித்ததாக கூறினார். ஆனால் எதிர்க்கட்சியினரை பேச விடாமல் சபாநாயகர் ஓம்பிர்லா தடுத்து விட்டதாக குற்றம் சாட்டினார். நாடாளுமன்றம், அனைவருக்குமானது என்றும் ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்கு மட்டுமானது அல்ல என்றும் ராகுல்காந்தி கூறினார். நாடாளுமன்றத்தில் பிரதமர் குறித்து பேச ஆரம்பித்தாலே தம்மை அமைதியாக்கி விடுவதாகவும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்தார்.

**மாநிலங்களவை**

சமையல் எரிவாயு தட்டுப்பாடு விவகாரம் மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. அப்போது, சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று திருச்சி சிவா வலியுறுத்தினார். அனைத்து வகையான சிலிண்டர் தட்டுப்பாடுகளையும் போக்க ஒன்றிய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் மாநிலங்களவையிலும் அமளி நிலவியது.

**எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!**

இதற்கிடையே, சிலிண்டர் தட்டுப்பாட்டைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவுடன் மோடி அரசு செய்து கொண்ட சமரசமும், டிரம்ப்பின் மிரட்டலுக்கு அடி பணிந்து, ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைத்ததும்தான் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம் என குற்றம்சாட்டினர். சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.



கழக முன்னாள் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களை அவரது இல்லத்தில் கழகத்தின் சார்பில் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சந்தித்து வாழ்த்துப்பெற்றார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, தலைமைக் கழகச் செய்தித் தொடர்புக்குழுச் செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் வாழ்த்துப் பெற்றனர்.